


# 29.04.2026 செய்திகள்

## கருப்பை உரிமையை உறுதிசெய்த தீர்ப்பு

- ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக, குழந்தை பெற்றுக்கொள்ளும்படி அவரை எந்த நீதிமன்றமும் நிர்ப்பந்திக்கக் கூடாது என உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு வரவேற்கத்தக்கது.
- கருவில் உள்ள குழந்தையைவிட அதைச் சுமக்கும் தாயின் விருப்பமும் மனநலனுமே முக்கியம் என்கிற நீதிமன்றத்தின் கருத்து. பெண்களின் மகப்பேறு உரிமையை உறுதிசெய்வதாக இருக்கிறது.
- 18 வயதுக்கு உள்பட்ட ஒருவருடன் ஏற்பட்ட உறவால் 15 வயதுடைய தன் மகள் கருவுற்றிருப்பதால் அதைக் கலைப்பதற்கு அனுமதி அளிக்கும்படி உச்ச நீதிமன்றத்தை ஒரு பெண் அணுகினார்.
- இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் பி.வி.நாகரத்னா, உஜ்ஜல் பூயான் அடங்கிய இருவர் அமர்வு, மருத்துவரீதியான கருக்கலைப்புக்கு அனுமதித்துத் தீர்ப்பு வழங்கியது.
- பாலியல் வன்முறையால் பாதிப்புக்கு உள்ளானவர்கள், குடும்பத்துக்குள் முறையற்ற உறவால் கருவுற்றவர்கள், மாற்றுத்திறனாளிகள் - பதின்பருவப் பெண்கள் உள்ளிட்ட எளிதில் பாதிப்புக்கு உள்ளாகும் பெண்கள் ஆகியோரின் நலனைக் கருத்தில்கொண்டு மருத்துவரீதியான கருக்கலைப்புத் திருத்தச் சட்டம் 2021இல் நடைமுறைக்கு வந்தது.
- இந்தச் சட்டம் 24 வாரங்கள் வரையிலான கருவைக் கலைக்க வழிவகை செய்கிறது. ஆனால், 15 வயதுச் சிறுமியின் வயிற்றில் வளரும் கரு ஏழு மாதங்களைக் கடந்து விட்டதால் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலைச் சிறுமியின் தாய் நாடினார்.
- 30 வாரங்களைக் கடந்த நிலையில் கருக்கலைப்பை மேற்கொள்வது தாய் – சேய் இருவரது உயிருக்கும் ஆபத்தாக அமையலாம் எனவும், குழந்தை பிறந்த பிறகு மத்திய தத்தெடுப்பு வாரியத்தின் மூலமாகக் குழந்தையைத் தத்துக் கொடுத்துவிடலாம் எனவும் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வாதிட்டார்.
- ஒருவரது உடல் சார்ந்த குறிப்பாக இனப்பெருக்கம் சார்ந்த உரிமைகளில் முடிவெடுப்பது என்பது அரசமைப்புச் சட்டக்கூறு 21 வலியுறுத்தும் தனி உரிமை அந்தரங்க உரிமையின் உட்கூறு.
- குழந்தையை வளர்க்க விருப்பமில்லை என்றால் தத்துக் கொடுத்துவிடலாம் என்பதையும் இழப்பீடு கோரலாம் என்பதையும் ஏற்க முடியாது.
- இது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்பில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது.

SURESH'

- தன் உயிருக்கு ஆபத்து எனத் தெரிந்தும் கருவைக் கலைக்க முன்வந்திருக்கும் பெண்ணின் உள்ளார்ந்த உணர்வுக்கு இத்தீர்ப்பின் மூலம் மதிப்பளித்திருக்கும் உச்ச நீதிமன்றம், 'நாம் இப்போது கருக்கலைப்புக்கு அனுமதி அளிக்கவில்லை என்றால், யாரும் நீதிமன்றங்களை நாட மாட்டார்கள்.
- சட்டவிரோதமான, முறையற்ற கருக்கலைப்புகள் நடைபெறக்கூடும்' என்று குறிப்பிட்டிருப்பது, நம் சமூக அவலங்களை அழுத்தமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது.
- திருமணமானவர்கள் மட்டுமே மருத்துவரீதியான கருக்கலைப்புக்குத் தகுதியானவர்கள் என்று இருந்த நிலையில், கருக்கலைப்புத் திருத்தச் சட்டம் 2021, விருப்பமற்ற கருவைக் கலைக்க அனைத்துப் பெண்களுக்கும் உரிமை உண்டு என்று உறுதிசெய்ததோடு அதற்குப் பெண்ணின் அனுமதி மட்டுமே போதும் என்றும் வரையறுத்துள்ளது.
- 15 வயதுச் சிறுமியின் எதிர்காலத்தை முன்னிட்டுத் தகுந்த மருத்துவப் பாதுகாப்பு ஏற்பாடுகளோடு கருக்கலைப்பை மேற்கொள்ள உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

## ராம்சார் தளங்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாட்டை மிஞ்சத் தயாராகும் உத்தர பிரதேசம்

- 1971, பிப்ரவரி 2-ல் ஈரானின் ராம்சார் நகரில் ஒரு சர்வதேச மாநாடு நடைபெற்றது.
- உலகம் முழுவதும் உள்ள ஈரநிலங்களைப் பாதுகாக்க நடத்தப்பட்ட இந்த மாநாட்டில் சுமார் 170 நாடுகள் பங்கேற்று ஒப்பந்தம் கையெழுத்திட்டன. இது 1975, டிசம்பர் 21-ல் நடைமுறைக்கு வந்தது.
- இந்த மாநாட்டின் படி, நீரோட்டம் கொண்ட, பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு இயற்கையான வாழ்விடங்களை வழங்குகின்ற மற்றும் பல்லுயிர் பெருக்கத்துக்கான சாதியக்கூறுகளை கொண்ட ஈரநிலங்கள் ராம்சார் பட்டியலுக்கு தேர்வு செய்யப்படுகின்றன.
- இந்தியாவின் ராம்சார் தளங்கள் பட்டியலில் தமிழ்நாடு 20 தளங்களுடன் முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து 12 தளங்களுடன் உபி. 2-ம் இடத்தில் உள்ளது. உ.பி.யின் அலிகரில் உள்ள ஷேகா ஏரி சமீபத்தில் ராம் சார் பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- இதையடுத்து உ.பி.யின் பலியாவில் உள்ள சுர்ஹதால் பறவைகள் சரணாலயம் விரைவில் ராம்சார் பட்டியலில் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மேலும் பல மாவட்டங்களின் முன்மொழிவுகளும் ராம் சார் பட்டியலில் சேர்ப்பதற்காக தயார் செய்யப்பட்டு வருகின்றன.
- உபி.யின் புவியியல் அமைப்பும், கங்கை-யமுனா தோவாப் பகுதியில் உள்ள பரந்த ஈரநிலங்களும் இத்துறையில் மாநிலத்தை ஒரு முன்னோடியாக மாற்றக்கூடும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.
- தற்போது, இந்தியாவில் 99 ராம்சார் தளங்கள் உள்ளன. தமிழ்நாடு, உ.பிக்கு பிறகு பஞ்சாப், ஒடிசா மற்றும் பிஹாரில் தலா 6 ராம்சார் தளங்கள் உள்ளன.
- நான்காவது இடத்தில் தலா 5 தளங்களுடன் குஜராத், ராஜஸ்தான், ம.பி. மற்றும் ஜம்மு காஷ்மீர் உள்ளன.


TUTICORIN 99445 11344 | TIRUNELVELI 98942 41422 | RAMANATHAPURAM 75503 52916 | MADURAI 98431 10566 | CHENNAI 97555 52003 | COVAI 90433 10773 | TENKASI 98840 51717

SURESH' IAS ACADEMY

## ராணுவத்துக்கு அதிக செலவு 5-வது இடத்தில் இந்தியா

- சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஸ்டாக்ஹோம் அனைத்து உலக அமைதி ஆய்வுக் கழகம் (எஸ்ஐபிஆர்ஐ) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது : 2025-ம் ஆண்டில் இந்தியா தனது ராணுவத் தேவைக்காக 92.1 பில்லியன் அமெரிக்க டாலர்களை செலவிட்டுள்ளது.
- இந்தியா தனது பாதுகாப்புச் செலவுகளை கணிசமாக உயர்த்தியுள்ளது. உலகளாவிய ராணுவச் செலவினங்களில் இந்தியாவின் பங்கு 3.2 சதவீதமாக உள்ளது.
- இந்த வரிசையில் முதலிடத்தில் அமெரிக்காவும், 2-வது இடத்தில் சீனாவும், 3-வது இடத்தில் ரஷ்யாவும், 4-ம் இடத்தில் ஜெர்மனியும் உள்ளன.

## ஒபெக் அமைப்பிலிருந்து யுஏஇ விலகல்

- அபுதாபி வாயிலாக 1967-இல் இந்த அமைப்பில் இணைந்த ஐக்கிய அரபு அமீரகம், பின்னர் 1971-இல் தனி நாடாக உருவெடுத்த பிறகும் தொடர்ந்து உறுப்பினராக நீடித்து வந்தது; சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலான உறவை தற்போது முறித்துக்கொண்டுள்ளது.
- 'புவிசார் அரசியல் சூழல் மற்றும் உற்பத்தி ஒதுக்கீடு தொடர்பாக ஏற்கெனவே பல முரண்பாடுகளைக் கொண்டுள்ள ஒபெக் அமைப்பை.
- அதன் நீண்ட கால உறுப்பினரான ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியேற்றம் மேலும் பலவீனப்படுத்தும் என்று பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.
- நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால எரிசக்தி உத்திகளைத் தீவிரமாகப் பரிசீலித்த பிறகே இக்கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒபெக் அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் சவூதி அரேபியாவிடம் இந்த விலகல் தொடர்பாக எந்த ஆலோசனையும் நடத்தப்படவில்லை என்றார்.
- சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மானின் நேரடித் தலைமையீட்டின்கீழ், அந்நாடு அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் ஐக்கிய அரபு அமீரகத்துக்குப் போட்டியாகச் செயல்படத் தொடங்கியது.
- அதேபோல், யேமன் உள்நாட்டுப் போரில் ஈரான் ஆதரவு ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவூதி, ஐக்கிய அரபு அமீரகப் படைகள் இணைந்து செயல்பட்டன.
- இருப்பினும், ஐக்கிய அரபு அமீரக ஆதரவு பெற்ற பிரிவினை வாதிகளின் ஆயுதக் கிடங்குகளைச் சவூதி அரேபியா கடந்த டிசம்பரில் குண்டுவீசித் தகர்த்தது.
- இவ்வாறு, இரு நாடுகளுக்கும் இடையே பிராந்திய அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக நிலவி வரும் கடும் போட்டியின் உச்சகட்டமாகவே, ஒபெக் அமைப்பிலிருந்து ஐக்கிய அரபு அமீரகத்தின் இந்த வெளியேற்றம் பார்க்கப்படுகிறது.
- மேலும், எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென ஒபெக் அமைப்பின் நிபந்தனைகள் ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்ததும் இம்முடிவுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.
- ஒபெக் அமைப்பிலிருந்து வெளியேறிய போதிலும், சர்வதேச சந்தையின் தேவையைக் கருத்தில் கொண்டு, படிப்படியாகவும் முறையான அளவிலும் கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய அரபு அமீரகம் தெளிவுபடுத்தியுள்ளது.
- இதன்மூலம், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விநியோகத்தில் சமநிலையைப் பேணப் போவதாக அந்நாடு உறுதியளித்துள்ளது.